# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශේෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 158/10 — 1975 අප්‍රේල් 11 වැනි සිකුරාදා — 1975.04.11

158/10 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. கே. டீ. 157 — கோதுமை மா

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

அத்தியாயம் 173 ம் விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கண்டி மாவட்டத்திற்கும், நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) அஹங்கம வலவகே சந்திரசிரி ஆரியதாச ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1975 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 ம் திகதி வெளிவந்த இலங்கை அரசாங்க அதிவிசேட 151/66 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1975 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ம் திகதியைக் கொண்ட கே. டீ. 156 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன் ;

(2) இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளை அவற்றிற்கு நேரே 1 ம் பத்தியில் குறிப்பிட்ட எல்லைக்குள் முழு நிகர 112 றுத்தல் கோதுமை மாவின் ஆகக் கூடுதலாக விற்கவேண்டிய மொத்த விலையென்றும், அவற்றிலும் மேலதிகமாக விற்கப்படாதென்றும் உடனடியாக நியமிக்கின்றேன் ;

(3) இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியிலுள்ள இடங்களில் இதற்கு நேரே 2 ம் பத்தியிலுள்ள விலைகள் கோதுமை மாவின் நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையென்றும் அவற்றிற்கு மேலதிகமாக சில்லறையாக விற்கப்படாதென்றும் உடனடியாக நியமிக்கிறேன் ;

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) கோதுமை மாவின் நிகர அந்தர் ஒன்றை அல்லது அதற்குக் கூடுதலாக எத்தொகையையாவது திரும்ப விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) கோதுமை மாவின் நிகர அந்தர் ஒன்றிற்குக் குறைந்த எத்தொகையையாவது விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(இ) கோதுமை மாவுடன் சோள மாவும் கலந்து இருக்குமென கருதப்படும் ;

(5) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் கோதுமை மாவுடன் சோள மாவைத் தவிர வேறொரு பொருளோடு கலந்து விற்றல் ஆகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) நூற்றுக்குப் பத்து வீதத்திற்குக் கூடுதலான சோள மா கலந்து கோதுமை மாவுடன் சோள மாவை ஒருவரும் விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடங்களில் தம் கட்டுப்பாட்டில் அல்லது வாகனத்திலாவது கோதுமை மாவை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் கோதுமை மாவில் ஒரு சிறு பகுதியை நிரப்பி இக்கட்டளையால் கோதுமை மாவிற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குலத்துக்குக் குறையாத எண்களில் எழுதப்பட்ட ஒரு விலை அட்டடையை அல்லது பலகையை வாங்குபவர்களால் நன்கு பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இறுத்தல் அல்லது இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமெனக் கட்டளையிடுகிறேன் ;

(9) நிகர 112 இறுத்தலுக்குக் கூடவோ அல்லது குறையவோ நிறையுள்ள மாவை விற்குமிடத்து ஒரு மொத்த வியாபாரி விற்க வேண்டிய ஆகக் கூடிய மொத்த விலையை 112 இறுத்தலுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளிலிருந்து கணித்துக் கூட்டியோ, குறைத்தோ விற்கவேண்டுமென நியமிக்கிறேன் ;

(10) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் கோதுமை மாவை மொத்தமாக விற்பனை செய்பவர் ஒவ்வொருவரும் அதை வாங்குவோருக்கு பின்வரும் பற்றுச் சீட்டைக் கொடுப்பதோடு சில்லறையாக விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் அதை வாங்குவோர் கேட்குமிடத்து பின்வரும் விபரங்களைக் கொண்ட பற்றுச்சீட்டொன்றைக் கொடுக்கவேண்டுமென விதிக்கிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கோதுமை மாவின் அளவு (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எந்த விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது

(11) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நிர்மிக்கப்பட்டுள்ள இடங்களில் கோதுமை மாவை விற்குமிடத்து அதைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்குமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1975 ஏப்பிறல் 09 ந் திகதி முற்பகல் 9.00 மணிக்குக் கண்டிக் கச்சேரியில் ஒப்பம் இடப்பட்டது.

அ. வ. ச. ஆரியதாச,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
கண்டி மாவட்டம், நுவரெலியா மாவட்டத்திலுள்ள
உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியும்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>நிகர 112 இருத்தலின் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|
| 1. கண்டி முனிசிப்பல் எல்லை | 123 03 |
| 2. உடுநுவர பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| கெலிஓய | 122 95 |
| தவிலகல | 122 95 |
| வட்டப்பொல | 122 95 |
| 3. யட்டிநுவர பிரதேச உதவி அரசாங்க அதிபர் பகுதி— | |
| கடுகன்னுவை | 122 91 |
| பிலிமதலாவை | 122 91 |
| 4. பாத்தஹேவாஹெட்ட உதவி அரசாங்க அதிபர் பகுதி— | |
| தலாத்துஓய | 123 21 |
| மாரஸ்ஸன | 123 21 |
| தெல்தொட்ட | 123 36 |
| 5. பாத்ததும்பர பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| நவயாலதென்ன | 123 04 |
| வத்தேகம | 123 04 |
| குண்டசாலை | 123 04 |
| 6. மெததும்பர பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| தெல்தெனிய | 123 15 |
| உடிஸ்பத்து | 123 15 |
| 7. உடதும்பர பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| மாடுகொட | 123 38 |
| 8. மினிபே பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| ஹஸ்ஸலக | 123 66 |
| மொரயாய | 123 66 |
| 9. ஹரிஸ்பத்து பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| அலவத்துகொட | 123 13 |
| தித்தபஜ்ஜல | 123 09 |
| பூஜாபிட்டிய | 123 04 |
| ஹெதெனிய | 123 09 |
| 10. தும்பனே பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| கலகெதர | 123 29 |
| ஹத்தரலியத்த | 123 29 |
| 11. உடபலாத்த பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| கம்பளை | 123 04 |
| நாரன்விட்ட | 123 04 |
| தெல்பிட்டிய | 123 04 |
| 12. பஸ்பாகே கோரளை பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| நாவலப்பிட்டி | 123 04 |
| 13. அம்பகமுவ கோரளை பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| ஹட்டன் | 123 04 |
| மஸ்கெலியா | 123 25 |
| கெஹெல்கமுவ | 123 13 |
| 14. நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பிரிவு— | |
| ஹங்குரன்கெத்த | 123 32 |
| ரிக்கில்லகஸ்கட | 123 32 |
| பதியபெலல்ல | 123 43 |
| 15. கங்கஇஹல கோரளை பிரிவு அதிகாரியின் பகுதி— | |
| குருந்துவத்த | 123 04 |
| உலப்பன | 123 04 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி (2)<br>ஒரு நிகர இருத்தல் கோதுமை மாவின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|
| 1. (அ) கண்டி முனிசிப்பல் எல்லை | |
| (ஆ) கங்கவட்ட கோரளை | |
| (இ) உடுநுவர பிரிவு அதிகாரியின் பகுதி | |
| (ஈ) யட்டிநுவர பிரிவு அதிகாரியின் பகுதி | |
| (உ) தெல்தொட்ட, பட்டியகம, உடகம, பட்டியகம, பல்லேகம, கபடாகம, நவனெலியா, போபிட்டிய, குருதெனியா, பூலியத்த, மயிலபிட்டி, மாரஸ்ஸன, உடுவெல–பல்லேகம, உடுவெல–உடகம என்ற கிராம சேவையாளர்களின் பகுதிகள் தவிர பாத்தஹேவாஹெட்ட பிரதேச உதவி அரசாங்க அதிபர்களின் பகுதிகள் | 1 12 |
| (ஊ) பாத்ததும்பர பிரதேச உதவி அரசாங்க அதிபரின் பகுதி | |
| (எ) மெததும்பர பிரிவு அதிகாரியின் பகுதி | |
| (ஏ) ஹாரிஸ்பத்து பிரிவு அதிகாரியின் பகுதி | |
| (ஐ) உடபலாத்த பிரிவு அதிகாரியின் பகுதி | |
| (ஒ) பஸ்பாகே கோரளை பிரிவு அதிகாரியின் பகுதி | |
| (ஓ) கங்க இஹல பிரிவு அதிகாரியின் பகுதி | |

| பத்தி (1) இடம் | பத்தி (2) ஒரு நிகர இருத்தல் கோதுமை மாவின் ஆகக் கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|
| 2. (அ) தெல்தொட்ட பட்டியகம, உடகம, பட்டியகம–பல்லேகம, கபடாகம, நவனெலியா, போபிட்டி, பூலியத்த, மயிலப்பிட்டி, மாரஸ்ஸன, உடுவெல–பல்லேகம, உடுவெல–உடகம ஆகிய பாத்தஹேவாஹெட்ட பிரதேச உதவி அரசாங்க அதிபரின் பகுதி .. .. .. <br> (ஆ) தும்பனே பிரிவு அதிகாரியின் பகுதி .. .. .. .. <br> (இ) உடத்தவ, மீமுரே ஆகிய கிராம சேவையாளரின் பகுதி தவிர உடதும்பர பிரிவு அதிகாரியின் பகுதியிலுள்ள மற்ற எல்லாக் கிராமப் பகுதிகள் .. .. .. .. | 1 12 |
| 3. அம்பகமுவ கோரளே பிரிவு அதிகாரியின் பகுதியிலுள்ள பொல்பிட்டி கிராம சேவையாளர் பகுதி .. | 1 14 |
| 4. (அ) உடத்தவ, மீமுரே ஆகிய உடதும்பர பிரிவு அதிகாரியின் பகுதியிலுள்ள கிராம சேவையாளர் பகுதி <br> (ஆ) இடம்பிட்டிய ஆகிய நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதியிலுள்ளகிராம சேவையாளரின் பகுதி .. .. .. .. <br> (இ) மினிப்பே பிரிவு அதிகாரியின் பகுதி .. .. .. .. | 1 14 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட கோதுமை மாவை விற்கவேண்டிய விலைகள் அல்ல. இவைகள் ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைக்கு மேலாக கோதுமை மாவை விற்றலாகாது.

4–406

---

உணவு விலைக் கட்டளை இல. வ. 125 கோதுமை மா

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 173)

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) கந்தையா சிவப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1975 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ந் திகதி வெளியான 151/66 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1975 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ம் திகதியைக் கொண்ட வ 124 ம் இலக்கக் கட்டளையை 1975.03.31 தொடக்கம் நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் 2 ம் 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், சில்லறை வியாபாரி ஒருவர் பாவனையாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், கோதுமை மாவை இந்த விலைக்குக் கூடுதலாக குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் விற்கலாகாதெனவும் 1975.03.31 தொடக்கம் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) கோதுமை மாவில் இத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு நிகர அந்தரைக் கொண்ட கோதுமை மாவை அல்லது அதிற் கூடிய தொகையை ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகை கோதுமை மாவையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் இப்பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி இப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்குகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், கோதுமை மாவை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் இப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்)

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது சில்லறை விற்பனையா அல்லது மொத்த விற்பனையா.

(8) கோதுமை மா விற்கப்படுமிடத்து 2 ம் 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் இப்பொருளைச் சுற்றிக் கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

கந்தையா சிவப்பிரகாசம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
வவுனியா மாவட்டம்.

1975 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04 ந் தேதி காலை 9.00 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

அட்டவணை

| பத்தி 1<br>இடப்பரப்பு | பத்தி 2<br>1 அந்தர் (112 நிகர இறுத்தல்) நிறை கொண்ட கோதுமை மாவிற்கு ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>நிகர இறுத்தல் கோதுமை மாவை விற்றல் ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுகள் (தமிழ்/சிங்களம்) .. .. .. .. | 123 40 | .. | 1 12 |
| 2. பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர், வெண்கலச்செட்டிக்குளம் பிரிவு .. | 123 83 | .. | 1 13 |
| 3. வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் மாங்குளம், புளியங்குளம், கனகராயன்குளம் கிராம விதானைப் பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய கிராம விதானைகளின் பகுதிகள் .. .. .. | 123 76 | .. | 1 13 |
| 4. வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் சேர்ந்த கிராம விதானைகளின் பகுதிகள் மாங்குளம், புளியங்குளம், கனகராயன்குளம் .. | 123 83 | .. | 1 13 |
| 5. வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவும் புதுக்குடியிருப்பும் .. .. .. .. | 124 06 | .. | 1 13 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள் விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) 112 நிகர இறுத்தலுக்குக் கூடிய அல்லது குறைந்த தொகை கோதுமை மாவை மொத்தமாக விற்கும்போது அதன் ஆகக் கூடிய மொத்த விலை மேலே குறிப்பிட்ட 112 நிகர இறுத்தலின் ஆகக்கூடிய மொத்த விலையில் இருந்து கணிக்கப்பட்ட சராசரியாகும்

4-107

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது